பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 31 செவ்வாய்க்கிழமை 16.09.2025 கதிர் 310

## இனி இது ரகசியம் அல்ல!

வேலியே பயிரை மேய்ந்த கதை கேள்விப்பட்டிருப்பீர்கள், வேலி வேலியையே மேய்ந்த கதை கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இலங்கை பொலிஸில் அதுவும் நடக்கிறது. ☞2

# பருத்தித்துறையில் எமக்கு துறைமுகம் வேண்டாம்

## இந்திய அரசின் முயற்சிக்கு மீனவர்கள் கடும் எதிர்ப்பு



பருத்தித்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்வதால் எமது கிராம்மே அழிவடைந்து போகும் அபாயம் இருப்பதால் அங்கு வர்த்தகத் துறைமுகம் ஒன்று அமைக்கவேண்டாம் என்று சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. தேர்தலின்போது மீனவர்களின் பக்கம் இருப்போம், வடக்கு மீனவர்களைக் காப்போம் என்று சொன்ன என்பிபி ஆளும்தரப்பு இன்று துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஆய்வுகளை மீனவர்களுடன் கலந்தாலோசிக்காமலேயே மேற்கொள்கிறது என்றும் சங்கம் குற்றஞ்சாட்டுகின்றது.

பருத்தித்துறை-சுப்பர்மடம் கடற்றொழிலாளர்கள் ☞2

# ரூ. 2000 நாணயத்தாள் படிப்படியாக வங்கிகள் ஊடாகப் புழக்கத்திற்கு

## மத்திய வங்கி அறிவிப்பு

இலங்கை மத்திய வங்கி அண்மையில் வெளியிடப்பட்ட 2000 ரூபா நினைவு நாணயத்தாள் படிப்படியாக அனுமதி பெற்ற வணிக வங்கிகள் மூலம் புழக்கத்திற்கு விடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கி நேற்று திங்கட்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் 75ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், கடந்த ஆகஸ்ட் 29ஆம் திகதி 2000 ரூபா நினைவு நாணயத்தாள் வெளியிடப்பட்டது. இந்த புதிய நாணயத்தாள்களின் ஏற்றுமதி மற்றும் விநியோகத்தை இலகுபடுத்துவதற்காக, அனுமதி பெற்ற வணிக வங்கிகள் தமது பணத்தை கையாளும் இயந்திரங்களை ஒழுங்கமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளன. இந்த செயல்முறைக்கு ஏற்ப, புதிய நாணயம் படிப்படியாக வணிக வங்கிகள் மூலம் புழக்கத்திற்கு விடப்படும்.

அனைத்து வங்கி வழித்தடங்களிலும் இந்த நாணயம் தடையின்றி பயன்படுத்தப்படும் என்று மத்திய வங்கி உறுதியளித்துள்ளது. இயந்திரங்களை ஒழுங்கமைக்கும் பணி நிறைவடைந்ததும், இந்த நாணயம் தடையின்றி அனைத்து வங்கி வழித்தடங்களிலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

# இந்திய மீனவர் அத்துமீறலைத் தடுக்க அரசியல் ரீதியான தீர்வொன்றே தேவை

## கடற்படை உயரதிகாரி தெரிவிப்பு

தமிழக மீனவர்கள் வடக்கு கடலில் சட்ட விரோத மீன் பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது நீண்ட காலமாக தீர்க்கப்படாத பிரச்சினையாகவுள்ளது. கடற்படையினர் என்ற ரீதியில் இந்தப் பிரச்சினை தொடர்பில் எடுக்கப்படக் கூடிய சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றபோதிலும், இந்த பிரச்சி னைக்கு அரசியல் ரீதியான இராஜதந்திர தீர்வொன்று காணப்பட வேண்டும் என கடற்படை வலியுறுத்தியுள்ளது. கடந்த சகல அரசாங்கங்களிடமும் இது வலியுறுத்தப்பட்டுள்ளதாக கடற்படை அதிகாரிகள் பிரதானி ரியர் அத்மிரல் டேர்டமியன் பெர்ணாண்டோ தெரிவித்தார்.

கொழும்பு கோட்டையிலுள்ள கலங்கரை விளக்கம் உணவக வளாகத்தில் நேற்று நடந்த மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழக மீனவர்கள் வடக்கு கடலில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது எமது வாழ்நாள் முழுவதும் எதிர்கொள்ளும் பிரச்சினையாகவுள்ளது. கடற்படையினர் என்ற ரீதியில் இந்த பிரச்சினை தொடர்பில் எடுக்கப்படக் கூடிய சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருக்கின்றோம். இது தொடர்பான தரவுகளையும் நாம் அவ்வப்போது ஊடகங்களுடன் பகிர்ந்து கொண்டிருக்கின்றோம். எவ்வாறிருப்பினும் இந்த பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வொன்று காணப்பட வேண்டும் என்பதை கடந்த சகல ஆளும்தரப்புக்களிடம் நாம் வலியுறுத்தியிருக்கின்றோம்.

இந்திய கடற்படை மற்றும் இந்திய கரையோர பாதுகாப்பு ☞2

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் தொழில்நுட்பப் பணியாளர் கைது

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் காலி வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்பப் பணியாளர் ஒருவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று நியாகம பகுதியில் வைத்து குறித்த அதிகாரி கைது செய்யப்பட்டதாக ☞2

# சட்ட ஆட்சியைக் காப்பதன் மூலம் அனைவருக்கும் சமத்துவமான நாடு

## அதுவே ஆளும்தரப்பின் இலக்கு – நீதி அமைச்சர்

சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதன் மூலம் அனைவருக்கும் சமத்துவமான நாடொன்றை உருவாக்குவதே ஆளும்தரப்பின் நோக்கமாகும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவிவித்தார். அவர் அங்கு ☞2

# மின்சார சபை ஊழியர்களுடன் இனியும் பேச விரும்பவில்லை

## அது கால வீணடிப்பு என்கிறார் அமைச்சர் குமார ஜெயகொடி

புதிய மறுசீரமைப்புக்கமைய இலங்கை மின்சாரசபையின் 23ஆயிரம் சேவையாளர்கள் அரசுக்கு சொந்தமான நான்கு நிறுவனங்களில் சேவைக்கு அமர்த்தப்படுவார்கள். இந்நிறுவனங்களுக்கு செல்ல விருப்பமில்லாத ஊழியர்கள் சுய விருப்பத்தின் அடிப்படையில் சேவையில் இருந்து விலகலாம். அவ்வாறு விலகுபவர்களுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நட்டஈடு சூத்திரத்துக்கமைய குறைந்தபட்சம் 50 இலட்சம் ரூபாய் நட்டஈடு வழங்கப்படும் என வலுசக்தி அமைச்சர் குமார ஜெயகொடி தெரிவித்தார்.

மின்சார சபை தொழிற்சங்கத்தினரில் ஒருதரப்பினர் குறுகிய நோக்கங்களை ☞2

# மக்களின் பிரச்சினைகளை முன்வைக்கும் வாய்ப்பு நாடாளுமன்றத்தில் தற்போது குறைந்து வருகிறது

## எதிர்க் கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

நாடாளுமன்றத்தில் பொது மக்களின் பிரச்சினைகளை முன்வைப்பதற்கான வாய்ப்புகள் தற்போது குறைந்து வருவதாகவும், மக்களின் பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்படும்போது ஆளும்தரப்பு ஒலிவாங்கிகளைத் துண்டிக்கும் நிலைக்கு வந்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் நடமாடும் சேவையின்கீழ், அனுராதபுரம் மாவட்டம், மதவாச்சி மற்றும் கெபித்திகொல்லாவ பிரதேச விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக நேற்று மதவாச்சிக்குச் சென்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார். ☞2

# உள்நாட்டு உற்பத்தி சற்றே அதிகரிப்பு

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 2,749,504 மில்லியன் ரூபாவில் இருந்து 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 2,883,669 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் ஆண்டுக்கு ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் நேரான வளர்ச்சி 4.9 சதவீதமாக பதிவாகியுள்ளது ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கொழும்பு மத்திய குற்றப்பிரிவு பொலிஸ் டிஐஜி அலுவலகத்தில் பணியாற்றும் கான்ஸ்டபிள்ஒருவர்கைதுசெய்யப்பட்டுள்ளார். பல நாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்பதைப் போல பொலிஸாரிடமே அவர் ஆட்டையைப் போட்டு வந்தது இப்போது கையும் களவுமாக மாட்டிக் கொண்டதால் அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் (டிஐஜி) அலுவலகத்தில் இருந்த பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸாரின் பைகள், பர்சுகளில் இருந்துசிறியஅளவில்பணம்திருட்டுப்போவது தொடர்ந்து நடந்து வந்துள்ளது. திருடப்படும் தொகை பெரிதில்லை என்றபோதும் பொலிஸ் நிலையத்திற்குள்ளேயே, அதுவும் டிஐஜி அலுவலகத்திற்குள்ளேயேவந்துதிருடும்அந்தத் திருடனைப் பிடிக்க முடியாமல் பொலிஸார் திண்டாடியுள்ளனர். அதனால் திருடன் யார் என்பதைக் கண்டுபிடிப்பதற்காகவே பொலிஸ் நிலையத்திற்குள் மறைகாணிகள் (சிசிரிவி) பொருத்தப்பட்டிருக்கின்றன.

பொலிஸார் ஓய்வெடுக்கும் அறை, அவர்களின் பைகள் உள்ளிட்ட உடமைகள் வைக்கப்படும் இடம், உணவருந்தும் இடம் என்று பல இடங்களிலும் மறைகாணிகள் பொருத்தப்பட்டுள்ளன. அதன் பின்னர் ஓய்வெடுக்கும் அறையில் ஒரு பொலிஸ் சர்ஜன்டின் பர்ஸ் தவறுதலாக மறந்து வைக்கப்படுவது போன்று மேசையில் விடப்பட்டுள்ளது.

கில்லாடியானதிருடன்அந்தப்பர்ஸிலிருந்து 100 ரூபாயை நைஸாக உருவிச் செல்வது மறைகாணியில்பதிவாகியுள்ளது. இதையடுத்து அந்த் திருட்டுத் தொடர்பில் புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதனைவிசாரித்தபொலிஸார் மறைகாணிப் பதவுகளை ஆய்வு செய்து, திருடனைக் கைது செய்தனர்.

திருடன் வேறு யாருமல்லர், அதே அலுவலகத்தில் பணியாற்றிய புதிய கான்ஸ்டபிளான சாரதி ஒருவர்தான். இவரை எப்படி அழைப்பது திருட்டுப் பொலிஸ் என்றா அல்லது பொலிஸ் திருடன் என்றா? .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பருத்தித்துறையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வடமராட்சியில் செய்தியாளர்களிடம் பேசியபோது இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

பருத்தித்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதால் எமது கிராம்மே அழிவடைந்து போகும் அபாயம் உள்ளது. பருத்தித்துறையில் ஒரு வர்த்தகத் துறைமுகம் எமக்குவேண்டாம், பதிலாக கரையோரங்களில் உள்ள அணைகளை அமைத்துத் தாருங்கள்.

1000கோடிரூபாசெலவில்இந்தியஅரசுஇந்தத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவதற்காக ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

2018ஆம்ஆண்டும்ஆசியஅபிவிருத்திவங்கி நிதி உதவியுடன் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய இதுபோன்ற முயற்சி எடுக்கப்பட்டபோது சமூக மட்ட அமைப்புக்களின் குறிப்பாகப் பாடசாலைகளின் எதிர்ப்புக் காரணமாக அது கைவிடப்பட்டது, இப்போது இந்திய அரசு அந்தப் பணியை நிறைவேற்ற முனைகிறது.

ஆனால், அருகில் உள்ள மீனவக் கிராமங்களுடன் இது பற்றிக் கலந்துரையாடவில்லை, தன்னிச்சையாக முடிவுகளை எடுத்துவிட்டு அபிவிருத்திக்காக கள ஆய்வுகளை மேற்கொண்டுவருகின்றனர். இந்தநடவடிக்கையை நாம் எதிர்க்கிறோம், இத் துறைமுகம் எமக்கு வேண்டாம்.

அரசுத் தலைவர் அநுரகுமார தேர்தல்களின் போது மீனவர்களின் பக்கமே நாம் இருப்போம், வடக்கு மீனவர்களைப் பாதுகாப்போம் என்று கூறினார். இப்போ என்னாச்சு? என கேள்வி எழுப்பினர்.

சுப்பர்மடம் கடற்றொழிலாளர்கள் செய்தியாளர்களைச் சந்திப்பதற்கு முன்னதாக பருத்தித்துறை நகர பிதா வின்சன் டீ போல் டக்ளஸ் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆகியோரைச் சந்தித்து தமது பிரசினைகளை எடுத்துக் கூறி மனுக்களைக் கையளித்தனர்.

## இலஞ்சம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பிட்டிகல பகுதியை சேர்ந்த நபருக்கு வீடமைப்புப் பணிகளுக்காக , வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்படும் 10 இலட்சம் ரூபா நன்கொடையை பெற்றுக் கொள்ள அவசியமான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்க 50 ஆயிரம் ரூபா பணத்தை இலஞ்சமாக வழங்குமாறு காலி வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடு (தொழில்நுட்ப) உத்தியோகத்தர் ஒருவர் கோரியுள்ளார். அதற்கடைய வீடமைப்புத் திட்ட நன்கொடையின் முதல் தவணையாக 146 ஆயிரம் ரூபா பணத்தை முறைப்பாட்டாளர் பெற்றுக் கொண்டபோது அப்பணத்திலிருந்த 25 ஆயிரம் ரூபாவை குறித்த உத்தியோகத்தர் இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட நபர் அளித்த முறைப்பாட்டுக்கமைய இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில் சந்தேகநபர் மீதமுள்ள 25 ஆயிரம் ரூபா பணத்தை முறைப்பாட்டளரிடமிருந்துநேற்றுபெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று திங்கட்கிழமை (15) காலை 11.45 மணியளவில் நியாகம பிரதேச செயலாளர் அலுவலக அபிவிருத்தி பிரிவினுள் வைத்து குறித்த உத்தியோகத்தர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு

## மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில், நானும் எனது சக உறுப்பினர்களும் தனிப்பட்ட விடயங்களை விடுத்து, மக்கள் பிரச்சினைகளை முன்வைப்பதற்காகவே எழுந்து நிற்கிறோம். இவ்வாறு மக்கள் பிரச்சினைகளை முன்வைக்கும் சந்தர்ப்பங்களில் அதனைத் தடுப்பது இழிவான செயலாகும். ஆளும்தரப்பு எதிர்க்கட்சியின் குரலை அடக்குவதையோ, பொய்யான கதைகளை முன்வைப்பதையோ விடுத்து, மக்கள் பிரச்சினைகளைக் கேட்டு நடைமுறை ரீதியான பதில்களை வழங்க வேண்டும்‘ என அவர் வலியுறுத்தினார்.

மக்களின் பிரச்சினைகள் குறித்து கேள்வியெழுப்புவது அரசியல் நாடகம் அல்ல, மாறாக மக்களுக்குத் தீர்வுகளை வழங்க அரசாங்கத்திற்கு வழிகாட்டுவதாக அதனை நாம் பார்க்கின்றோம். 2020 முதல் தாம் நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பி வருவதாகவும், இது ஒரு அரசியல் நாடகம் அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

‘அரசாங்கத்திடம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கடுமையான பிரச்சினைகளுக்கு எந்த தீர்வும் இல்லை‘ என்று கூறிய அவர், ரணசிங்க பிரேமதாசவால் ஆரம்பிக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலைகள் இன்று மூடப்பட்டுள்ளதால் ஆயிரக்கணக்கானோர் வேலையை இழந்துள்ளதாகவும், இளைஞர்கள் கூட கைவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

யானை-மனித மோதலுக்கு இதுவரை எந்த தீர்வும் காணப்படவில்லை எனவும், பயிர் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங்கள் மற்றும் உயிரிழப்புகளுக்கு முறையாக இழப்பீடு வழங்கும் திட்டங்கள் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார். தேர்தல் காலத்தில் மின்சார வேலி அமைப்பதாக வாக்குறுதியளித்தவர்கள் இன்று நாடக நடிகர்களாக மாறியுள்ளதாகவும் அவர் விமர்சித்தார்.

சட்டப்படி பெற்றுத் தருவதாக வாக்குறுதியளிக்கப்பட்ட நெல்லுக்கான உத்தரவாதவிலை இன்றுவரை விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இலவச சுகாதார சேவைகள் பெயரளவுக்கு மட்டுமே இருப்பதாகவும், மக்கள் பணம் செலவழித்தே அனைத்து மருத்துவ வசதிகளையும் பெற வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். சிறுநீரக நோய் அதிகமாக உள்ள கெபித்திகொல்லாவ பிரதேச மருத்துவமனையில் போதுமான டயாலிசிஸ் உபகரணங்கள் இல்லை எனவும், அரசாங்கத்தால் முடியாவிட்டால் ஐக்கிய மக்கள் சக்தி இதற்காக நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் உறுதியளித்தார்.

நாட்டில் மருந்துகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாகவும், இலவச சுகாதாரம் ஒரு அடிப்படை மனித உரிமை என்பதால் அது பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். அரசாங்கத்தின் பொய்களால் இனி நாம் ஏமாறக்கூடாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

ஆளும்தரப்பு பாரம்பரிய விவசாய உற்பத்திகளைத்தடைசெய்து, விவசாயநிலங்களை கையகப்படுத்தி வருகிறது. நெல், சோளம் மற்றும் உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்காததால், அவர்களால் தங்கள் விளைபொருட்களை விற்க முடியவில்லை. இந்தப் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடம் தீர்வுகள் இல்லாவிட்டாலும், ஐக்கிய மக்கள் சக்தியிடம் தீர்வுகள் உள்ளன என்று எதிர்க்கட்சி தலைவர் மேலும் தெரிவித்தார்.

## சட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து தெரிவித்ததாவது:

சிறைக் கைதிகளுக்காக வசதிகளை மேற்கொண்டு, சிறைக்கைதிகளுக்கான கைதிகள் நலநோன்பு சங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகள் பாராட்டத்தக்கதாகும். சிறைக்கைதிகளுக்கு வசதிகளை மேற்கொள்ளும்போது கைதிகள் நலனோள்பு சங்கம் வழங்குகின்ற ஒத்துழைப்பு பெரும் சக்தியாகும். தற்போது சிறைச்சாலைகளில் பாரிய நெருக்கடி இருந்து வருகிறது. இந்த நெருக்கடியை குறைத்து, தேவையான வசதிகளை வழங்குவது எமது பொறுப்பாகும்.

நபர்கள் சிறைச்சாலைகளுக்கு செல்வதை குறைப்பதே எமது நோக்கமாகமாக இருக்க வேண்டும். வறுமை காரணமாக சிறைக்கு செல்லும் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது., நாட்டின் சமூக நீதியின் மூலம் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தி, சிறைக்கு செல்லும் எண்ணிக்கையை குறைப்பதே ஆளும் அரசாங்கத்தின் நோக்கமாகும்.

சிறைப்படுத்தப்படும் அனைவரது மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பது மிகவும் முக்கியமாகும். சட்டத்துக்கு முன்னால் அனைவரும் சமமானவர்கள். ஆளும்தரப்பு என்றவகையில், சட்டத்தின் ஆட்சியை பாதுகாத்துக்கொண்டு, அனைவருக்கும் சமத்துவமான நாடொன்றை உருவாக்குவோம் என்றார்.

## இந்திய மீனவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையுடன் எமது நட்புறவு தொடர்ந்தும் சுமூகமாகப் பேணப்படுகிறது. இது குறித்த புதிய வழிமுறைகளை நாம் அரசாங்கத்திடம் யோசனைகளாக முன்வைத்திருக்கின்றோம். அதற்கமைய வடக்கு மீனவ சமூகங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அந்தவகையில் இந்த பிரச்சினை காலி கலந்துரையாடலில் முக்கிய விடயமாகப் பேசப்படும். நாமும் அதில் அவதானமாக இருக்கின்றோம்.

அத்தோடு எமது கடற்பரப்பின் ஊடாக இடம்பெறும் போதைப்பொருள் உள்ளிட்ட ஏனைய சட்ட விரோத பொருட்கள் கடத்தல் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளன. சகலநாடுகளுடனும்இணைந்துகடல்வழியூடான போதைப்பொருள்கடத்தலைகட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. எவ்வாறிருப்பினும் நூறு சதவீதம் அவை கட்டுப்படுத்தப்படவில்லை. எவ்வாறிருப்பினும்சட்ட ரீதியாக புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் சுற்றி வளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார்.

இது தொடர்பில் வடக்கு கடற்படை கட்டளை தளபதி ரியர் அத்மிரல் புத்திக லியனகமகே தெரிவித்ததாவது:

வடக்கு கடற்பகுதியே இதனால் அதிகளவில் பாதிக்கப்படுகிறது. எவ்வாறிருப்பினும் அண்மைக்காலமாக இலங்கை கடற்படை மற்றும் அரசாங்கத்தின் செய்தி அவர்களை சரியாக சென்றடைந்திருக்கிறது என்று நம்புகின்றோம். கடந்த 3 வாரங்களாக இந்திய மீனவர்கள் இலங்கைகடல்எல்லைக்குள்பிரவேசிக்கவில்லை. எமது கடற்படை படகுகளை அனுப்பி நாம் இந்த எல்லையிலிருக்கின்றோம் என்பதை அவர்களுக்கு காண்பிக்கின்றோம்.

உள்ளக மீனவர்களும் பெருமளவில் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இந்திய மீன்பிடிப் படகுகளை விட எமது மீன் பிடிப்படகுகளின்எண்ணிக்கைஅதிகமாகும். தமிழக மீனவர்கள்எமதுகடல்எல்லைக்குள்பிரவேசிக்கும் சந்தர்ப்பம் குறைவடைந்துள்ளமைக்கு இதுவும் ஒருபிரதான காரணியாகும். கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் தற்போது இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் சற்று குறைவடைந்துள்ளன என்றார்.

## மின்சார .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிலைப்படுத்தி போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். பேச்சு நடத்தி பல கோரிக்கைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுத்துள்ளோம். இனியும் பேச்சு ஈடுபட்டுகாலத்தைவீணடிக்கவிரும்பவில்லை எனவும் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் மின்கட்டமைப்பு மறுசீரமைப்பில் இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு பிரதான அம்சமாக காணப்படுகிறது. மின்சாரசபையின் கட்டமைப்பு முழுமையாக மறுசீரமைக்கப்படும். சபையின் பணிகள் மற்றும் பொறுப்புக்கள் நான்கு நிறுவனகட்டமைப்பின்கீழ்கொண்டுவரப்படும்.

மின்சார சபையின் பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள் நிறுவன கட்டமைப்பின் அடிப்படையில் வேறுபடுத்தப்படும். மின்சார சபையின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் குறித்து தற்போது தெளிவுப்படுத்தப்பட்டுள்ளன.

சட்டத்தின் பிரகாரம் மின்சார சபையை மறுசீரமைக்க வேண்டும். மின்சார சட்டத்தை திருத்தம் செய்யாமல் இருந்திருந்தால் கடந்த ஆளும்தரப்பு ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டுக்கமைய 12 ஆயிரம் ஊழியர்களை சேவையில் இருந்து நீக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

தொழிலாளர்களின் உரிமைகளை முடக்கவோ அல்லது அவர்களை சேவையில் இருந்து நீக்கவோ நாம் கருதவில்லை. காலத்தின் தேவைக்கேற்ப மின்சார சபை மறுசீரமைக்கப்பட வேண்டும். இதற்கமைய 2007 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 4 நிறுவனங்களிடமே இலங்கை மின்சார சபையின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள் கையளிக்கப்படுகின்றன. இந்நிறுவனங்கள் நூற்றுக்கு நூறு சதவீதம் அரசுக்கு சொந்தமானவை.

இலங்கை மின்சாரசபையின் 23 ஆயிரம் சேவையாளர்கள் இந்த நான்கு நிறுவனங்களில் சேவைக்கு அமர்த்தப்படுவார்கள். இந்நிறுவனங்களுக்கு செல்ல விருப்பமில்லாத ஊழியர்கள் சுய விருப்பத்தின் அடிப்படையில் சேவையில் இருந்து விலகலாம். அவ்வாறு விலகுபவர்களுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நட்டஈடு சூத்திரத்துக்கமைய குறைந்தபட்சம் 50 இலட்சம் ரூபாய் நட்டஈடு வழங்கப்படும்.

மின்சார சபை தொழிற்சங்கத்தினரில் ஒருதரப்பினர் குறுகிய நோக்கங்களை முன்னிலைப்படுத்தி போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு பல கோரிக்கைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுத்துள்ளோம். இனியும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு காலத்தை வீணடிக்கவிரும்பவில்லை. மின்கட்டமைப்பை பயனுடையதாக்குவதற்காகவே இந்த மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படுகிறது என்றார்.

## உள்நாட்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கையின் தேசிய கணக்கு மதிப்பீடுகள் மற்றும் இரண்டாம் காலாண்டு (2025) தொடர்பில் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கானஉற்பத்திஅணுகுமுறையால் நடப்பு, நிலையான விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அது தொடர்பான பொருளாதாரக் குறிக்காட்டிகளை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

நிலையான விலையில் (2015), இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 2,749,504 மில்லியன் ரூபாவில் இருந்து 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 2,883,669 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளமை பதிவாகியுள்ளது.

அத்துடன்2025ஆம்ஆண்டின்இரண்டாம் காலாண்டில் ஆண்டுக்கு ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் நேரான வளர்ச்சி 4.9 சதவீதமாக பதிவாகியுள்ளது. விவசாயம்,கைத்தொழில்,மற்றும் சேவை நடவடிக்கைகள் அனைத்தும் முறையே 2.0 சதவீதம்,5.8 சதவீதம், 3.9 சதவீதம் என்று உயர்வடைந்துள்ளன.

2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்பு விலையில், 2024 ஆம் ஆண்டின் அதே காலாண்டில் பதிவு செய்யப்பட்ட 6,661,030 மில்லியன் ரூபாவில் இருந்து 7,362,510 மில்லியனாக அதிகரித்துள்ளதுடன், இது நடப்பு விலை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நடப்பு விலையில் 10.5 சதவீத நேர் மாற்றத்தையும் பதிவு செய்கிறது.

பொருளாதாரத்தின் மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகளான விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகியவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நடப்பு விலையில் முறையே 10.1 சதவீதம்,25.1 சதவீதம் மற்றும் 52.8 சதவீதம் பங்களித்துள்ளன. அதேவேளை 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் ‘பொருட்கள் மீதான வரிகள் மானியங்கள் நீங்கலாக‘ என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12.0 சதவீத பங்களிப்பை அதிகரித்துள்ளது.

2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் விவசாயம், கைத்தொழில், மற்றும் சேவைகள் துறைகள் அனைத்தும் முறையே 2.0 சதவீதம்,5.8 சதவீதம்,3.9 சதவீதம் என்றடிப்படையில் பதிவாகியுள்ளன. பொருட்கள் மீதான வரிகள் மானியங்கள் நீங்கலாக 13.5 சதவீதம் அதிகரித்துள்ளன. மேலும் வரிகளின் வளர்ச்சி அதிகரித்த வாகன இறக்குமதியுடன் தொடர்புடைய வரிகளின் அதிகரிப்பால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# வியத்புர வீட்டுத் திட்டம் குறித்து ஆளும்தரப்புப் பொய்ப் பரப்புரை

## முன்னாள் எம்.பி. தொலவத்த குற்றச்சாட்டு

வியத்புற வீட்டுத்திட்டம் தொடர்பாக ஆளும்தரப்பு உண்மைக்கு மாறான தகவல்களை வெளியிட்டு வருவதாகவும், இது ஒரு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை எனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த குற்றம் சாட்டியுள்ளார். நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், இந்த விடயம் குறித்து தான் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

மக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக விவாதிக்கப்பட்ட வியத்புற வீட்டுத் திட்டம், ஆளும்தரப்பின் அரசியல் நாடகமாக மாறியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இந்த வீடுகள் இலவசமாகவோ அல்லது மிகக் குறைந்த விலையிலோ பெறப்பட்டதாக ஆளும்தரப்பு தவறான பரப்புரைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வீட்டுக்காக நான் 1.4 மில்லியன் ரூபாவை காசோலையாகச் செலுத்தியுள்ளேன். வீட்டின் மொத்த பெறுமதியான 20.2 மில்லியன் ரூபாவை நான் முழுமையாகச் செலுத்தியுள்ளேன். இதன் பெறுமதி இறுதியாக 30.7 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது என ஆவணங்களைக் காண்பித்து அவர் தெரிவித்தார். முதலில் பணத்தை ஏற்றுக்கொண்ட ஆளும்தரப்பு, இப்போது வீடுகளின் விற்பனை மோசடியானது எனக் கூறுவதாகவும் அவர் விமர்சித்தார்.

ஆளும்தரப்பின் இந்தச் செயற்பாடுகள் வெறுமனே அரசியல் வஞ்சகம் மற்றும் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே மேற்கொள்ளப்படுவதாகக் கூறிய அவர், இது போன்ற செயல்கள் நேர்மையானவர்கள் அரசியலுக்கு வருவதைத் தடுக்கும் என்றும் தெரிவித்தார். 'வியத்புற வீட்டுத் திட்டம்' ஏழை மக்களுக்கானது அல்ல, நடுத்தர வர்க்கத்தினருக்கானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், முன்னாள் அரசுத்தலைவர்களின் சலுகைகளை ஆளும்தரப்பு பறித்திருப்பது குறித்து தனது அதிருப்தியை வெளியிட்ட பிரேம்நாத் சி தொலவத்த, இது கடந்த கால தலைவர்கள் மீது காட்டும் மரியாதையின்மை எனவும், எதிர்கால தலைவர்களுக்கு இது ஒரு தவறான முன்னுதாரணமாக அமையும் எனவும் எச்சரித்தார். போரை முடிவுக்குக் கொண்டுவந்தது, நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தது போன்ற சேவைகளுக்காக கடந்த கால தலைவர்கள் மதிக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

தன்னிடம் தேவையான அனைத்து சட்ட ஆவணங்களும் இருப்பதாகவும், தனது நேர்மையை நிரூபிக்க சட்ட நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அரசியல் பிரசாரங்களுக்கு பொதுமக்கள் ஏமாறாமல் உண்மையை அறிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்த பின்னரே தான் வீட்டின் ஆரம்ப கட்டணமான 25 சதவீத தொகையைச் செலுத்தியதாகவும், அதன் பின்னர் மாதாந்த தவணைகளை தொடர்ந்து செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். இந்த பரிவர்த்தனையில் ஏதேனும் சிக்கல் இருந்தால், ஆளும்தரப்பு பணம் வாங்கியிருக்கக்கூடாது அல்லது அதனை திருப்பி அளித்திருக்க வேண்டும் என்றும், அதற்குப் பதிலாக பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்துவது நியாயமற்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.






காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கல்வி சீர்திருத்தம் : வாய்ப்பு தவறுகிறதா?

இலங்கையில்இலவசக்கல்விஎன்பதுமக்களின்மனதில்தனித்துவமான இடத்தைப்பெற்றுள்ளது. கல்விச்சீர்திருத்தம்என்றவார்த்தைசொல்வதுமே மக்கள் பரபரப்பாக விவாதிக்கின்றனர். காரணம் எளிமையானது – கல்வி என்றால் அது மக்களின் குழந்தைகளின் எதிர்காலம், நாட்டின் முன்னேற்றம் என்பதோடு நேரடியாக இணைந்திருக்கிறது.

இந்நிலையிலேயே, பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி 2026 தை மாதம் முதல் கல்விச் சீர்திருத்தங்கள் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், இவ்வறிவிப்பு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. காரணம், இவ்வளவு முக்கியமான சீர்திருத்தத்திற்கு முன்பானவெள்ளைஅறிக்கை(White Paper)எதுவும்வெளியிடப்படவில்லை. பொதுமக்கள், கல்வியாளர்கள், நிபுணர்கள் ஆகியோருடன் விரிவான ஆலோசனை நடத்தப்படவில்லை. எந்தக் குழு அல்லது நிறுவனம் இந்தச் சீர்திருத்தங்களை வடிவமைத்தது என்பதும் வெளிப்படையாகத் தெரிவிக்கப்படவில்லை. இத்தகைய சூழலில் கல்வி சீர்திருத்தம் முன்னெடுக்கப்படுவது வெளிப்படைத்தன்மைக்கு எதிரான செயல் என மக்கள் உணர்கின்றனர்.

சமூக ஊடகங்களில் கசிந்த 33 பக்கங்களைக் கொண்ட ஆங்கில பவர் பாயிண்ட் (PowerPoint) சுருக்க வழங்கலே இதுவரை வெளிவந்த கல்விச் சீர்திருத்தம் தொடர்பான முக்கிய ஆவணம். அதிலும் ஐந்து முக்கிய பகுதிகள் குறிப்பிடப்பட்டிருந்தாலும், விவரம் சொல்லப்பட்டிருப்பது முதல் பகுதியான – பாடத்திட்ட மேம்பாடு – குறித்தே. அதுவும் எவ்வித ஆதாரமும், ஆய்வும், காரண விளக்கமும் இல்லாமல் சில பரிந்துரைகள் மட்டுமே.

அதில் முக்கியமாக இரண்டு பரிந்துரைகள் கவனிக்கத்தக்கவை:

தொழிற்பயிற்சியும் தொழில்நுட்பக் கல்வியும் பொது கல்வியுடன் இணைப்பது.

9ஆம் வகுப்பு முடித்தவுடன் (14 வயது) மாணவர்களை தொழில் சார்ந்த படிப்புப் பிரிவுகளுக்குள் திருப்புவது.

இதனால், 9ஆம் வகுப்புக்குப் பிறகு கல்வியின் முக்கிய நோக்கம் "தொழிலுக்குத்தயாராக்குதல்" என்றுநிர்ணயிக்கப்படுகிறது. மாணவர்களின் மன, உடல், உணர்ச்சி, ஆன்மிக வளர்ச்சி 14 வயதுக்குள் முடிந்துவிடும் என்ற வித்தியாசமான கருதுகோளின் அடிப்படையில் இப்பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பிரதமர் கூறியதாவது: "பாடசாலைகள் மாணவர்களை தொழிலுக்கு தயாராக்கவில்லை. அதனால் பல்கலைக்கழகங்கள்கூட மென்மையான திறன்களை (soft skills) கற்பிக்க வேண்டியுள்ளது. ஆகவே மாணவர்கள் 10ஆம்வகுப்புமுதலேதங்கள்தொழில்பாதையைத்தேர்வுசெய்யவேண்டும்." ஆனால், இந்தக் கருத்தின் நடைமுறைச் சாத்தியம் கேள்விக்குறியாகிறது.

இலங்கையில் தற்போது 10% க்கும் குறைவான அரசுப் பாடசாலைகளில் மட்டுமே அறிவியல், கணிதப் பிரிவுகள் மேல் நிலைப் பருவத்தில் கற்பிக்கப்படுகின்றன. ஆய்வக வசதி, தொழில்நுட்ப வசதி, ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பது பரவலான பிரச்சினை. இத்தகைய சூழலில் நாட்டின் முழு கல்விக் கட்டமைப்பையும் ஸ்டெம் (ஸ்டீம் – அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம்) நோக்கி திருப்புவது மிகுந்த யதார்த்தமற்ற கனவாகும்.

இதை விடக் கவலையளிப்பது, இந்தச் சீர்திருத்தம் புதியதாக இல்லையே என்பதே. முந்தைய அரசுகளின் முயற்சிகளின் தொடர்ச்சியே இது. 2019–ல் சிறிசேன–விக்ரமசிங்க ஆட்சி தொடங்கிய "தேசிய பாடத்திட்டக் கட்டமைப்பு", 2020–ல் கோட்டாபய ஆட்சியின்போது வெளியிடப்பட்ட "Reimagining Education" அறிக்கை, 2023–ல் ரணில் ஆட்சியின்போது உருவான "National Education Policy Framework" ஆகியவற்றின் நீட்சியே இப்போதைய சீர்திருத்தம். 2024–இல் சில பள்ளிகளில் முன்முயற்சித் திட்டமாக சோதனையும் நடத்தப்பட்டது. எனவே, எதிர்க்கட்சியில் இருந்தபோது "இவை தூக்கிப் போட வேண்டிய திட்டங்கள்" என்று பேசிய NPP இப்போது அதையே ஏற்றுக்கொள்வது மிகப் பெரிய முரண்பாடாகவே தெரிகிறது.

இதற்கு பின்னணி காரணம் சர்வதேச நிதி நிறுவனங்கள் (IFIs). உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவை "மனித மூலதனம்" என்ற பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படையில் கல்வி கொள்கைகளை நிதி உதவியுடன் திணித்துக் கொண்டே வருகின்றன. இந்தக் கோட்பாடு உலகளவில் விமர்சிக்கப்பட்டாலும், இன்னும் தெற்காசிய நாடுகளின் கல்விக் கொள்கையை நிர்ணயிக்கின்றது. பல்வேறு கல்வித் திட்டங்களுக்கு வழங்கப்படும் கடன்கள் 10–15 ஆண்டுகள் வரை நீளும். அதனால் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும், அந்தக் கடன் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு விடுகிறது. இப்போது தேசிய மக்கள் சக்திக்கும் அதேநிலை.

மக்கள் எதிர்பார்ப்பது கல்விச் சீர்திருத்தம் நடக்கக்கூடாது என்பதல்ல. மாறாக, அனைவருக்கும் சமத்துவமான, தரமான இலவசக் கல்வி கிடைக்க வேண்டும் என்பதே. அதற்காக அரசாங்கம் வெளிப்படையாக தங்கள் நோக்கங்களை விளக்கி, பொதுமக்கள், கல்வியாளர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் ஒரு தேசிய ஒப்பந்தத்தை உருவாக்க வேண்டும். பெரும்பான்மையும் மக்கள் ஆதரவும் கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தி இதனைச் செய்ய ஏற்ற இடத்தில் இருக்கிறது. ஆனால் அவர்கள் வெளிப்படைத்தன்மையை புறக்கணித்து, "நிபுணர்கள் முடிவெடுக்கட்டும்" என்ற பெயரில் சீர்திருத்தங்களை மறைமுகமாக திணிக்க முயல்கின்றனர்.

இது ஒரு தவறவிடப்பட்ட வாய்ப்பு. இலங்கையின் இலவசக் கல்வி அமைப்பை சமூக நீதி நிறைந்த எதிர்கால நோக்கில் திருப்பிக் கொள்ளும் வாய்ப்பை மக்கள் எதிர்நோக்கியிருந்தனர். ஆனால் அதற்குப் பதிலாக பழைய திட்டங்களையே புதிய ஆடையில் கொண்டு வருவது மக்கள் நம்பிக்கையை சிதைக்கும். கல்விச் சீர்திருத்தம் என்றால் அது அரசியல் விளையாட்டோ, வெளிநாட்டு வங்கிகளின் திட்டமோ ஆகக்கூடாது. அது மக்களுடன் இணைந்து, குழந்தைகளின் நலனுக்காக அமைய வேண்டிய ஒரு தேசியப் பணியாக இருக்கவேண்டும்.

# புறக்கோட்டை பேருந்து நிலைய சீரமைப்பு 2026 சித்திரைக்கு முன்னதாக பூர்த்தியாகும்

### போக்குவரத்துத் துறை அமைச்சர் தெரிவிப்பு

புறக்கோட்டை மத்திய பேருந்து நிலையத்தின் அபிவிருத்தி பணிகள் எதிர்வரும் சித்திரை பத்தாண்டுக்கு முன்னர் நிறைவு செய்யப்படும். பராமரிப்பு பணிகள் ஒரு ஆண்டுக்கு விமானப்படைக்கு ஒப்படைக்கப்படும். அபிவிருத்திகளை சிறந்த முறையில் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பொதுமக்களுக்கு உண்டு என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி, கப்பற்றுறை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

புறக்கோட்டை மத்திய பேருந்து நிலையத்தின் அபிவிருத்தி பணி அரசுத் தலைவர் அநுரகுமாரவினால் நேற்றுத் தொடக்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றுகையில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

மக்களின் அடிப்படை வசதிகள் சிறந்த முறையில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டதற்கமைய பல அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்து வைத்துள்ளோம். நாடளாவிய ரீதியில் உள்ள பேருந்து நிலையங்கள் மற்றும் புகையிரத நிலையங்கள் கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்யப்படும்.

தலைநகருக்குவரும்பொதுமக்களின்பிரதானசேவை மையமாக புறக்கோட்டை மத்திய பேருந்து நிலையம் காணப்படுகிறது. கடந்த 60 ஆண்டுகாலமாக இந்த பேருந்து நிலையம் அபிவிருத்தி செய்யப்படவில்லை. சாரதிகள் மற்றும் பொதுபயணிகளின் அடிப்படைத் தேவைகளை கூட பூர்த்தி செய்யும் வகையில் பேருந்து நிலையம் கடந்த காலங்களில் புனரமைக்கப்படவில்லை.

புறக்கோட்டை மத்திய பேருந்து நிலையத்தின் அபிவிருத்தி பணிகள் விமானப்படைக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி பணிகள் எதிர்வரும் ஆண்டு சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் நிறைவுப்படுத்தப்படும்.

சீரமைப்புப் பணிகள் நிறைவடைந்தததும், பேருந்து நிலையம் விமானப்படையிடம் ஒப்படைக்கப்படும். ஏனெனில் அபிவிருத்தி செய்தால் மாத்திரம் போதாது அதனை சிறந்த முறையில் பராமரிக்கவேண்டும். பேருந்து நிலையத்தின் அபிவிருத்தியை தூய்மையான முறையில் பேணும் பொறுப்பு பொதுமக்களுக்கு உண்டு என்றார்.

# 12ஆவது காலி கலந்துரையாடல் செப்டெம்பர் 24, 25 கொழும்பில்

*சர்வதேச கடல்சார் மாநாடான 12ஆவது 'காலி கலந்துரையாடல் (கோல் டயலொக்)' செப்டெம்பர் 24, 25 ஆகிய தினங்களில் கொழும்பில் இடம்பெறவுள்ளது. உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட இந்த மாநாடு, நாடளாவிய ரீதியிலுள்ள கடற்படைத் தளபதிகள், கொள்கை வகுப்பாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் கடல்சார் நிபுணர்களை ஒன்றிணைப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கடற்படை அதிகாரிகளின் பிரதானி ரியர் அத்மிரல் டேர்டமியன் பெர்னாண்டோ தெரிவித்தார்.*

*கொழும்பு கோட்டையிலுள்ள கலங்கரை விளக்கம் உணவக வளாகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:*

*வெள்ளவத்தையில் உள்ள கடற்படை மண்டபத்தில் இம்மாடு இடம்பெறவுள்ளது. கடற்படையின் சொந்த வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளவும், செலவு மற்றும் தளவாடங்களை திறம்பட நிர்வகிக்கவும், மாநாடு கொழும்பில் நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும். சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட இந்த மாநாடு, உலகெங்கிலும் உள்ள கடற்படைத் தளபதிகள், கொள்கை வகுப்பாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் கடல்சார் நிபுணர்களை ஒன்றிணைப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தியப் பெருங்கடல் பிராந்தியம் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்து ஆக்கப்பூர்வமான உரையாடலை ஊக்குவிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். இந்த ஆண்டின் கருப்பொருள் 'மாறும் சூழலில் இந்தியப் பெருங்கடலின் கடல்சார் கண்ணோட்டம்' என்பதாகும். இது தற்கால உலகுக்கு மிகவும் பொருத்தமான ஒரு தலைப்பாகும்.*

*உலகளாவிய வர்த்தகம் மற்றும் வலுசக்தி பாதுகாப்புக்கு இந்தியப் பெருங்கடல் மிகவும் முக்கியமானது. இருப்பினும், புவிசார் அரசியல் போட்டி, கடல்சார் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவு போன்ற காரணங்களால் இது அதிகரித்து வரும் அழுத்தங்களைஎதிர்கொண்டுள்ளது. இந்தமாநாடு பின்வரும் ஐந்து முக்கிய கருப்பொருட்கள் மூலம் இந்த அழுத்தமான பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் என நம்புகின்றோம்.*

*முதலாவது கடல் சூழல் என்ற கருப்பொருளானது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், கடல்சார் நிர்வாகம் என்றகருப்பொருளானதுவிதி அடிப்படையிலான ஒழுங்கை வலுப்படுத்துவதாகவும், கடல்சார் பொருளாதாரம் என்ற கருப்பொருளானது நீலப் பொருளாதாரத்தை பொறுப்புடன் விடுவிப்பதாகவும், கடல்சார் நிலைத்தன்மை என்பது வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்கு இடையிலானசமநிலையைஏற்படுத்துவதாகவும், தூய்மையான இந்தியப் பெருங்கடல் என்ற கருப்பொருளானது எதிர்கால தலைமுறைகளின் நலனுக்காக மாசுபாட்டை எதிர்த்தலாகவும் அமையும்.*

*இம்மாநாட்டில் பிரதமர் ஹரிணி பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார். இன்றைய நிலவரப்படி 33 நாடுகள் மற்றும் 12 சர்வதேச அமைப்புகள் மாநாட்டில் கலந்துகொள்வதை உறுதிப்படுத்தியுள்ளன. இது ஒரு பெரிய இராஜதந்திர சாதனையாகும். இவ்வளவு பெரிய பங்கேற்பு, இந்தியப் பெருங்கடலின் எதிர்காலத்தை கூட்டு மற்றும் ஒத்துழைப்பு முயற்சிகள் மூலம் மட்டுமே பாதுகாக்க முடியும் என்பதை உலகளாவிய ரீதியில் அங்கீகரிப்பதைக் காட்டுகிறது.*

*இதில் விவாதிக்கப்படவுள்ள பிரச்சினைகள் வெறும் கருத்துக்கள் அல்ல. அவை நாட்டின் பாதுகாப்பு, செழிப்பு மற்றும் வாழ்க்கை முறைமையை நேரடியாக பாதிக்கின்றன. இந்த நிகழ்வின் வழிநடத்தல் குழுவின் தலைவரான வடக்கு கடற்படை கட்டளை தளபதி நியமிக்கப்பட்டுள்ளது. இதன் வெற்றி, 'அனைத்து நாடுகளுக்கும் நண்பர்கள்' என்ற இலங்கையின் வெளியுறவுக் கொள்கைக்கு ஒரு சான்றாகும்.*

*மாநாட்டின் முக்கிய கவனம் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு ஆகும். இலங்கையின் மூலோபாய இருப்பிடம், பாதுகாப்பான கடல்வழித் தடங்களுக்கு ஒரு முக்கிய இடமாக அமைகிறது. மேலும், பல வெளிநாட்டு கடற்படை கப்பல்கள் இலங்கையின் துறைமுகங்களுக்கு வருகை தருவதால், நாட்டின் கடற்படை இராஜதந்திரம் சர்வதேச ஒத்துழைப்பை ஈர்ப்பதில் மிகவும் வெற்றிகரமாக உள்ளது.*

*இந்தியப் பெருங்கடலில் அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பை உறுதி செய்வதற்கான ஒரு சிறந்த தளமாக 'காலி கலந்துரையாடல் (கால் டயலாக்)' செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பங்கேற்கும் கடற்படைகள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் உறுதிப்படுத்தப்பட்ட பட்டியல், இந்த நிகழ்வின் முக்கியத்துவத்தையும் உலகளாவிய ரீதியிலான அணுகலையும் மேலும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.*

*அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், கம்போடியா, கனடா, எகிப்து, பிரான்ஸ், ஜேர்மன், இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான் , கென்யா, மலேசியா, மாலைத்தீவு, மாரிஷியஸ், மெக்சிகோ , மெங்கோலியா, மியான்மர், நமீபியா, நெதர்லாந்து, நைஜீரியா, ஓமான், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், ரஷ்யா, சவுதி அரேபியா, சிங்கப்பூர், ஸ்பெயின் , ஸ்வீடன் , சுவிட்சர்லாந்து, தாய்லாந்து, துருக்கி, உக்ரைன், பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் சாம்பியா உள்ளிட்ட நாடுகளில் இம்மாநாட்டில் பங்கேற்கவுள்ளன என்றார்.*

# ‘ஐஸ்’ தயாரிப்பு மூலப் பொருளுடன் நிலங்கவின் உதவியாளர் கைது

ஐஸ் போதைப்பொருள் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் இரசாயனம் என சந்தேகிக்கப்படும் 52 லிட்டர் இரசாயனத்துடன், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் நபரும் பாதள உலக்குழுவை சேர்ந்தவருமான பாணந்துறை நிலங்கவின் உதவியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்தோடு சந்தேகநபரிடமிருந்து ஐஸ்போதைபொருளும், போதைப்பொருள் விநியோகத்திற்கு பயன்படுத்தப்பட்ட சொகுசு கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தோனேசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களும் பாதாள உலகக்குழு தலைவர்களான கெஹல்பத்தர பத்மே உள்ளிட்ட ஐவர் கடந்த ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி நாடுகடத்தப்பட்டனர். சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கமைய பாணந்துறை நிலங்கவுடன் தொடர்புடைய அவரது உதவியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். களுத்துறை குற்றப்பிரிவு அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை(14) பாணந்துறை அருகொட பகுதியில் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்து மேற்படி சந்தேக நபரை கைது செய்தனர்.

இதன்போது கைதான நபரிடமிருந்து ஐஸ் போதைப்பொருள்தயாரிப்புக்குபயன்படுத்தப்படும் இரசாயனம் என சந்தேகிக்கப்படும் 52 லிட்டர் இரசாயனம் அடங்கிய 14 கேன்கள் கைப்பற்றப்பட்டன. அத்தோடு சந்தேக நபரிடமிருந்து ஐஸ் போதைப்பொருளும் பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். 21 வயதுடைய பாணந்துறை பகுதியை சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய அம்பாந்தோட்டை மயூரபுர பகுதியில் உள்ள வீடொன்றினுள் சோதனையிட்ட போதே மேற்படி இரசாயனம்கைப்பற்றப்பட்டுள்ளது.அவ்வீட்டினுள் ஈரானிய பிரஜைகளும் இலங்கையில் உள்ள ஒரு சில நபர்களும் இணைந்து ஐஸ் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதுடன், குறித்த சந்தேகநபர்கள் தற்போது அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. மேலும் போதைப்பொருள் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் பல உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த வீட்டு வளாகத்திலிருந்து வெளிநாடு சென்று தலைமறைவாகியுள்ள குற்ற கும்பலைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு சொந்தமான சொகுசு கார் ஒன்றும் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட கார் பாணந்துறை நிலங்கவுக்கு சொந்தமான போதைப்பொருளை விநியோகிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவிசாரணைகளின்போது மேலும் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் களுத்துறை குற்றப்பிரிவால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## சிகிரியா குன்றில் பெயர் எழுதிய அவிசாவளை இளம் பெண் கைது

இலங்கையின் வரலாற்று சிறப்பம்சமாக விளங்கும் சிகிரியா குன்றின் பளிங்கு சுவரி ல் தன் பெயரை எழுதி சேதப்படுத்திய இளம்பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சீகிரியாவுக்கு சுற்றுலா சென்றிருந்த பெண் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (14) சிகிரியா குன்றின் பங்கு சுவரின் மீது கொண்டை ஊசியை கொண்டு சேதப்படுத்தியுள்ளார். குறித்த பெண் 7 ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு தனது பெயரை பளிங்கு சுவரில் பதித்திருந்ததாக விசாரணை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். சுவரை தொட வேண்டாம் எனும் அறிவித்தல் பலகை கட்சியளிக்கப்பட்டுள்ள இடத்திற்கு அருகாமையில் அப்பெண் இவ்வாறு சேதப்படுத்தியுள்ளார்.

சம்பவம் தொடர்புடைய பெண்ணை தொல்லியல் பாதுகாப்பு அதிகாரிகள் சிகிரியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ள நிலையில் அவரை கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். மேலும் நேற்று தம்புள்ளை நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேகநபர் முற்படுத்தப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான பெண் அவிசாவளை பகுதியை சேர்ந்தவர் எனவும், ஆடைத்தொழிற்சாலையில் ஒன்றில் பணியாறிவருடன் தொழிற்சாலை ஊழியர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட சுற்றுலாவில் கலந்துக் கொண்டு சீகிரியாவுக்கு வருகைத் தந்திருந்த்தமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. சிகிரியா குன்று இலங்கையின் வரலாற்று சிறப்பம்சமாக மட்டுமன்றி யுனெஸ்கோ அமைப்பினால் உலக பாரம்பரிய சின்னமாகும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஈ– சிகரெட்டுக்களை மாணவருக்கு விற்பனை செய்த பெண் கைது

திவுலப்பிட்டிய பகுதியில் பாடசாலை மாணவர்களுக்கு இலத்திரனியல் சிகரட்டுகளை விற்பனை செய்து வந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா - திவுலப்பிட்டிய பகுதியில் அமைந்துள்ள பிரபல பாடசாலைகளில் உள்ள மாணவர்களை இலக்கு வைத்து இலத்திரனியல் சிகரட்டுகளை விற்பனை செய்துவந்த பெண் ஒருவர் நேற்று திவுலப்பிட்டிய பொலிஸ் நிலைய ஊழல் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார். பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய சுற்றிவளைப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்து திவுலப்பிட்டியவில் உள்ள பாடசாலை ஒன்றின் அருகில் வைத்து மேற்படி சந்தேகநபரை அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

கைதான பெண் 32 வயதுடைய கம்பஹா - வெயாங்கொடை பகுதியை சேர்ந்தவராவார். மேலும்சந்தேகநபர்நீண்ட காலமாக இலத்திரனியல் சிகரட்டுகளை விற்பனை செய்துவந்துள்ளமை ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. 5500 முதல்7000 ரூபா வரை இலத்திரனியல் சிகரட்டுகளை அவர் விற்பனை செய்துவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வெளிநாட்டில் உள்ள அவரது கணவர் மூலம் இவ்வகையான சிகரட்டுகளை அவர் பெற்றுக் கொண்டுள்ளார். இதேவேளைசந்தேகநபர்தொடர்பில் திவுலப்பிட்டிய பொலிஸார்மேலதிகவிசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# அரிசியின் கட்டுப்பாட்டு விலையில் மாற்றம் செய்யும் எண்ணம் இல்லை

சந்தையில் ஏற்பட்டுள்ள கீரி சம்பா மற்றும் சம்பா அரிசிக்கான தட்டுப்பாட்டை காரணமாகக்கொண்டு அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயித்து விடுக்கப்பட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பில் திருத்தத்தம் மேற்கொள்ள எண்ணம் இல்லை என நுகர்வோர் நடவடிக்கை தொடர்பான அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன் தெரிவித்தார்.

சந்தையில் கீரி மற்றும் சம்பா அரிசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கீரி சம்பா மற்றும் சம்பா அரிசிக்கு சந்தையில் தட்டுப்பாடு நிலவி வருவது தொடர்பான தகவல் நுகர்வோர் நடவடிக்கை தொடர்பான அதிகார சபைக்கு கிடைத்திருந்தது. இதுதொடர்பில் தேடிப்பாத்தபோது, அவ்வாறு அரிசி தட்டுப்பாடு தொடர்பில் அதிகாரசபைக்கு தகவல் கிடைத்தது

என்றாலும் வர்த்தமானி அறிவிப்பொன்றின் மூலம் அரிசிக்கானகட்டுப்பாட்டுவிலைநிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்தால், நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் தேவையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதனால் வர்த்தமானி அறிவிப்புக்கு உட்பட்டதாக நடவடிக்கை எடுக்க முடியுமான வகையில் நெல் மற்றும் அரிசி கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் அரிசி தொடர்பான சுற்றிவளைப்பு நடவடிக்கையைதொடர்ந்துமுன்னெடுத்துச்செல்வதுடன் அதுதொடர்பில் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகளை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்போம். அதேநேரம் அரிசி தொடர்பான சுற்றிவளைப்பு இதுவரைக்கும் 3ஆயிரத்தை தாண்டியுள்ளதுடன் அதில் சுமார் ஆயிரம் பேருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் சுமார் 95 மில்லியன் ரூபா வரை அறவிடப்பட்டிருக்கிறது.

எவ்வாறு இருந்தாலும் தற்போது சந்தையில் நிலவும் அரிசிக்கான தட்டுப்பாட்டை காரணமாகக்கொண்டு, அரிசி கான கட்டுப்பட்டு விலை தொடர்பில் வெளியிடப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவிப்பில் திருத்தம் மேற்கொள்ள எந்த எதிர்பார்ப்பும் இதுவரை இல்லை. அதனால் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கு அரிசி விற்பனை செய்யுமாறும் நெல் கொள்வனவு செய்யுமாறும் அனைத்து தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## 11 வயதுச் சிறுவன் உட்பட இருவர் நீர் நிலைகளில் மூழ்கி உயிரிழப்பு

### ஞாயிற்றுக்கிழமையன்று பரிதாபம்

நாட்டின் இருவேறு பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை (14) நீர்நிலையில் நீராடச் சென்ற 11 சிறுவன் ஒருவன் உள்ளிட்ட இருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

கலேவெல பொலிஸ்பிரிவுக்குட்பட்ட தேவஹூவ நீர்தேக்கத்தில் நீராடச்சென்ற சிறுவன் ஒருவன் நீராடிக் கொண்டிருந்த நிலையில் எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். 11 வயதுடைய கலேவெல பகுதியை சேர்ந்த சிறுவன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தந்தை மற்றும் உறவினர்களுடன் நீர்தேக்கத்தில் நீராடுவதற்காக குறித்த சிறுவன் சென்றிந்ததாகவும் , சிறுவன் நீரில் மூழ்கியதை அவதானித்த குடும்பத்தினர் பிரதேசவாசிகளுடன் இணைந்து சிறுவனை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில், சிறுவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை அனுராதபுரம் தந்திரிமலை பகுதியில் மல்வத்து ஓயாவில் நீராடிக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மடு மாத ஆயத்துக்கு உறவினர்களுடன் புனித யாத்திரை சென்ற 21 வயதுடைய ஜா-எல பகுதியை சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தேவாலயத்தில் வழிபாடுகளை நிறைவு செய்த பின்னர் மீண்டும் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்த போது மல்வத்து ஓயாவில் நீராடியுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. மேற்படி சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## அமைச்சு செயலர்கள், நிறுவனத் தலைவர்கள் பதவிகளுக்கு நாடாளுமன்றக் குழுவில் அனுமதி

அமைச்சுக்களின் செயலாளர்கள் இருவர் மற்றும் நிறுவனத் தலைவர்கள் இருவரின் நியமனங்களுக்கு நாடாளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டது.

அதற்கமைய, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் செயலாளராக அருணி ரணராஜா மற்றும் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளராக யு.ஜி. ரஞ்சித் ஆரியரத்ன ஆகியோரின் பெயர்கள் உயர் பதவிகள் பற்றிய குழுவினால் அனுமதிக்கப்பட்டது.

அத்துடன், பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலைவராக எபிஸ். பர்னாந்து மற்றும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவராக ஜே.எம்.எஸ்.என். ஜயசிங்ஹ ஆகியோரின் பெயர்களும் உயர் பதவிகள் பற்றிய குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ளது

பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் கூடிய உயர் பதவிகள் பற்றிய குழுக் கூட்டத்தில், குழுவின் உறுப்பினர்களான அமைச்சர்களான, சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, குமார ஜயகொடி, அனில் ஜயந்த, உபாலி பண்ணிலகே, நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, கே. காதர் மஸ்தான், நிஹால் அபேசிங்க ஆகியோரும் ஒன்லைன் தொழில்நுட்பத்தின் ஊடாக பைஸர் முஸ்தபா மற்றும் சமிந்திராணி கிரிஎல்லே ஆகியோர் கலந்துகொண்டனர்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.09.2025இல் வெளியிடப்பெற்றது